**<u>மீனவ சமுதாயத்தை சார்ந்த பட்டதாரி இளைஞர்கள் – இந்திய குடிமைப்பணிகளில் சேர்வதற்கான போட்டித் தேர்வில் கலந்து கொள்வதற்கு வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

1. பயனாளிகள் மீனவ சமுதாயத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
2. பயனாளிகள் பெற்றோர் / பாதுகாப்பாளர் மீனவ கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
3. பயனாளிகள் பெற்றோர் / பாதுகாப்பாளர் மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
4. பயனாளியின் வயது 01.08.2022–ல் உள்ளபடி 21 முதல் 32 வயது வரையில் இருக்க வேண்டும்.
5. மிகவும் பிற்படுத்தப்பட்ட (Most Backward Class) வகுப்பினராக இருந்தால் வயது வரம்பு 35 வரையிலும், ஆதிதிராவிடர் /பழங்குடியினர் (SC/ST) வகுப்பினராக இருந்தால் வயது வரம்பு 37 வரையிலும், மாற்றுத்திறனாளியாக இருப்பின் வயது வரம்பு 42 வரையிலும் இருக்கலாம்.
6. பயனாளிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டப்படிப்பு முடித்து இருக்க வேண்டும்.
7. பயனாளிகள் பள்ளி கல்வியில் பன்னிரெண்டாம் வகுப்பில் 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று இருக்க வேண்டும்.
8. பயனாளிகள் படிப்பு முடித்து வேறு பணிகளில் பணிபுரிந்து வந்தாலும் தகுதியிருப்பின் இந்திய குடிமைப் பணியில் சேர்வதற்கான முழு நேரம் ஆயத்த பயிற்சியில் கலந்து கொள்ளலாம்.
9. மேற்கண்ட தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மையத்தின் இணையதளமான **www.civilservicecoaching.com**–ல் விண்ணப்பிக்க வேண்டும்.
10. பயனாளிகள் மேற்கூறிய இணையதளத்தில் விண்ணப்பிக்கும் போது பயிற்சி மையமாக சென்னையை தேர்ந்தெடுக்க வேண்டும்.
11. பயனாளிகள்அவ்வாறு விண்ணப்பித்த பின்பு பெற்றிடும் பதிவு எண் (Registration Number) மற்றும் விவரங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிப்பவர்கள் மட்டுமே பயிற்சிக்கான நுழைவு தேர்வினை எழுத அனுமதிக்கப்படுவர்.
12. பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் பயிற்சிக்கு அனுமதிக்க படமாட்டார்கள்.

மேலும் விவரங்களுக்கு அந்தந்த மாவட்டத்திலுள்ள மீன்வளம் மற்றம் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.

ஆணையர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை